நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2015

20 June 2015

தரம் : உயர் நிலை (ஆண்டு 11, 12)
Level : Advanced (Year 11 & 12)

வழங்கப்படும் நேரம் : 70 நிமிடங்கள்
(வாசிப்பதற்கான நேரம் 10 நிமிடங்கள் உட்பட)

**உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.**

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

**கீழ்க்கண்ட பந்தியை வாசித்து அதன் கீழுள்ள கேள்விகளிற்கு பதில் தரவும்.**

தமிழில் அருகி வரும் சிறுவர் இலக்கியம்.

ஒரு மொழி தொடர்ந்து வாழ வேண்டுமானால் அது தொடர்ந்து அடுத்த தலைமுறைக்குச் சென்று சேர வேண்டும். ஆனால் நாம், அடுத்த தலைமுறையினரான குழந்தைகளுக்கு நம் தமிழ் மொழியைக் கொண்டு சேர்ப்பதில் எந்தளவுக்கு அக்கறை காட்டுகிறோம் எனப் பார்த்தால் ஏமாற்றமே மிஞ்சுகிறது.

ஒரு மொழியின் அடிப்படை வடிவமே அதன் எழுத்து வடிவம்தான். மொழியை அப்படிப்பட்ட எழுத்து வடிவத்தில் குழந்தைகளிடம் கொண்டு சேர்ப்பதில் பாடத்திட்டத்துக்கு அடுத்தபடியாக முதன்மைப் பங்கு வகிப்பது 'சிறுவர் இலக்கியம்'! அப்பேர்ப்பட்ட சிறுவர் இலக்கியத்துறை இன்று தமிழில் மிகப்பெரும் வீழ்ச்சியைச் சந்தித்திருக்கிறது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு வரை ஏறத்தாழப் பத்துக்கும் மேற்பட்ட தமிழ்ச் சிறுவர் இதழ்கள் தமிழ்நாட்டில் விற்றுக் கொண்டிருந்தன. இருபது ஆண்டுகளுக்கு முன்பு வரை தமிழில் சிறுவர் இதழ் நடத்துவது என்பது நல்ல இலாபமீட்டக்கூடிய ஒரு தொழிலாக இருந்தது. ஆனால் இன்று, பெரிய நிறுவனங்களால் நடத்தப்படுகிற ஓரிரு சிறுவர் இதழ்களைத் தவிர மற்ற அனைத்தும் முற்றிலும் அழிந்து விட்டன. இருக்கிற அந்த ஓரிரு இதழ்கள் கூடத் தொண்டு மனப்பான்மையில், வீழ்ச்சியில்தான் இயங்குகின்றன. சிறுவர்களுக்கான இதழ்த்துறையே இப்படி என்றால் பதிப்புத்துறையைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. பதினைந்து, இருபது ஆண்டுகளுக்கு முன்பு வரை, குழந்தைகளுக்காகத் தமிழ்ப் பதிப்பகங்கள் தொடர்ச்சியாக நூல்களை வெளியிட்டு வந்தன. ஆனால் இன்று, அப்படி ஒரு முயற்சியே இல்லை. படிக்கும் பழக்கம் என்பது சிறு வயதிலேயே ஏற்பட்டால்தான் உண்டு. ஏனெனில், பொழுதுபோக்குகளிலேயே மிகவும் கடினமான பொழுதுபோக்கு படித்தல்தான். மற்ற எல்லாப் பொழுதுபோக்குகளையும் விடக் கவர்ச்சி குறைவான, ஆனால் பொறுமை கூடுதலாகத் தேவைப்படுகிற பொழுதுபோக்கு இது. அப்படிப்பட்ட பொறுமையையும், எழுத்தின் மீதான ஈர்ப்பையும், இலக்கிய ரசனையையும் சிறு வயதிலேயே மக்கள் உள்ளங்களில் ஊட்டும் அரும் தொண்டைத்தான் சிறுவர் இலக்கிய உலகம் வெற்றிகரமாகச் செய்து வந்தது. சுருங்கச் சொன்னால், தமிழ்ச் சமூகத்தில் இன்றும் படிக்கும் பழக்கம் அழியாமலிருக்கக் காரணமே பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு வரை சிறப்பாக இயங்கிக் கொண்டிருந்த தமிழ்ச் சிறுவர் இலக்கியத்துறைதான். ஆனால், இன்றைக்கு அந்தத் துறையே இவ்வளவு பெரிய வீழ்ச்சியை அடைந்திருக்கும் சூழலில், இன்றைய தமிழ்ச் சிறுவர்களிடம் படிக்கும் பழக்கம் இந்த அளவுக்கு அருகியிருக்கும் நிலையில், இன்றைக்குச் சிறுவர்களாக இருக்கும் இவர்கள்தாம் நாளைய தமிழ்ச் சமுதாயம் என்பதால் இன்னும் பத்து அல்லது பதினைந்து ஆண்டுகள் கழித்து மொத்தத் தமிழ்ச் சமூகத்தின் படிக்கும் பழக்கமும் இதே அளவுக்குக் குறைந்து போகும் என்பது தெளிவு.

அடுத்த தலைமுறைக்கு மொழியையும் மொழியின் மீதான ரசனையையும் கொண்டு சேர்க்கும் அடிப்படை ஊடகமான சிறுவர் இலக்கியத்தின் இந்த மாபெரும் வீழ்ச்சி தமிழ் மொழிக்கே ஏற்பட்டுள்ள மிகப்பெரிய ஆபத்து!

1. மேற்தரப்பட்டுள்ள பந்தியில் "பதிப்புத்துறை" என்று ஆசிரியர் குறிப்பிடுவது எதனை? (2 புள்ளிகள்)

2. சிறுவர் இலக்கியம் அவர்கள் மத்தியில் எதனை வெற்றிகரமாக செய்து வந்துள்ளது? (3 புள்ளிகள்)

3. சிறுவர் இலக்கியத்தின் வீழ்ச்சிக்கு எவை காரணமாக அமைந்திருக்கும் எனக் கருதுகிறீர்கள்? (3 புள்ளிகள்)

4. ஆசிரியர் உரைப்பகுதியின் இறுதில் கூறியிருப்பது பற்றிய உங்கள் கருத்து என்ன? (2 புள்ளிகள்)

**பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான பதிலைத் தெரிவு செய்க.**

5. இதில் ஐஞ்சிறு காப்பியம் அல்லாதது எது?

A) சூளாமணி

B) நீலகேசி

C) சிந்தாமணி

D) நாககுமாரகாவியம்

6. எங்கள் வீட்டுச் சுவரில் பல துவாரங்கள் உள்ளன. துவாரங்கள் என்றால்

A) பொந்துகள்

B) பள்ளங்கள்

C) குழிகள்

D) படங்கள்

7. பிறருக்காகத் தன்னலத்தை இழக்கும் தன்மை

A) யாகம்

B) தியாகம்

C) தொண்டு

D) கடமை

8. தொழிற் பெயரை தெரிவு செய்க

A) ஓடிய

B) ஓடு

C) ஓடினான்

D) ஓடுதல்

9. தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டுவித்த மன்னன்

A) இராஜேந்திர சோழன்

B) இராஜராஜ சோழன்

C) அநபாய சோழன்

D) மனுநீதி கண்ட சோழன்

10. எதிர்கால நிகழ்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவனைக் குறிக்கம் சொல்

A) சோதிடன்

B) வரகவி

C) தீர்க்கதரிசி

D) புத்திசாலி

11. இருபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா

A) பொன்விழா

B) மணிவிழா

C) அமுதவிழா

D) வெள்ளிவிழா

12. ஆடு மேய்ப்பவன் இடையன் என்பது போல தேர் ஓட்டுபவன்

A) சிற்பி

B) சாரதி

C) மீகான்

D) பாகன்

13. காவலன், பதி, கொற்றவன் என்பவற்றின் பொருளமைந்த ஒரு சொல்

A) அந்தணன்

B) அரசன்

C) வணிகன்

D) கடவுள்

14. மரணவீட்டில் இறந்தவரை நினைந்து பெண்கள் புலம்பியழும் நாட்டார் பாடல்:

A) கண்ணீர் வடித்தல்
B) ஒப்பாரி
C) சமரகவி
D) இரங்கற்பா

**பொருத்தமான பழமொழியைத் தெரிவு செய்க.**

15. கெடுதி விளைவிப்பவர்கள் துன்பம் அனுபவித்தே தீருவர்.

A) பாடுபட்டவன் பட்டத்திற்கிருப்பான்.
B) அடாது செய்தவன் படாது படுவான்.
C) அவதந்திரம் தனக்கந்திரம்.
D) தொட்டிற் பழக்கம் சுடகாடு மட்டும்.

16. 'பெரியவர்களும் சில சமயங்களில் தவறு விடுவது உண்டு'
இதற்குப் பொருத்தமான பழமொழி:

A) துள்ளிய மாடு பொதி சுமக்கும்
B) ஆனைக்குகொரு காலம் பூனைக்கொரு காலம்
C) ஆனைக்கும் அடி சறுக்கும்
D) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

17. 'என்னதான் இருந்தாலும் தனிக் குடித்தனம் நன்மை தரும்' இதை விளக்கும் பழமொழி:

A) உப்பிட்டவரை உள்ளளவும் நினை
B) எலி வளையானாலும் தனி வளை வேண்டும்
C) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
D) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

18. நாம் நினைத்தபடி கருமங்கள் நடைபெறுவதில்லை என்பதனை விளக்கும் பழமொழி:

A) அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது
B) அவனின்றி எதுவும் அசையாது
C) தான் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்
D) திக்கற்றவனுக்குத் தெய்வம் துணை

19. தம்பதியர் இருவர் ஒன்றுபட்டு வாழ்வதை விளக்கப் பொருத்தமான உவமை:

A) ஓடும் புளியம் பழமும் போல
B) பூவும் மணமும் போல
C) நாயும் பூனையும் போல
D) தாமரை இலை தண்ணீர் போல

20. ஒரு பொருளை தானும் அனுபவிக்காமல் பிறருக்கும் கொடாது வாழும் நிலையை விளக்கும் உவமைத் தொடர்:

A) வைக்கோற் பட்டடை நாய் போல
B) விழலுக்கு இறைத்த நீர் போல
C) குடத்துள் விளக்குப் போல
D) எலியும் பூனையும் போல

21. வேலை செய்யும் திறமை அற்றவன் என்று பொருள் படும் மரபுத் தொடர்:

A) கோமாளிக் கூத்து
B) கையாலாகாதவன்
C) ஒன்றுமறியாதவன்
D) காற்றாய்ப் பறப்பவன்

22. சங்க இலக்கியத்தின் பொருள் மரபு யாது

A) அறமும் பக்தியும்
B) வீரமும் பக்தியும்
C) புறமும் பக்தியும்
D) அகமும் புறமும்

23. “அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்”
என்ற பாடல் வரிகள் அமைந்த காப்பியம் எது ?

A) கம்பராமாயணம்
B) மகாபாரதம்
C) சிலப்பதிகாரம்
D) மணிமேகலை

24. க , ச , ட , த , ப , ற என்ற மெய்யெழுத்துக்கள் சேர்ந்த இனம் எது?

A) வல்லினம்

B) மெல்லினம்

C) இடையினம்

D) யாவும் சரி

25. யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற உயர்ந்த பண்பாட்டினை கூறியவன்

A) வள்ளுவன்

B) பாரதி

C) சங்கப்புலவன்

D) கம்பன்

26. ஒரு நிகழ்ச்சியினை மேடையேற்றுவதற்கு முன் செய்யப்படுவது

A) அரங்கேற்றம்

B) விழா

C) ஒத்திகை

D) அரங்காடல்

**வினாக்கள் 27-29: பின்வரும் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான எழுத்து வகையைத் தெரிவுசெய்க.**

| | |
|---|---|
| a) மதிப்பீட்டு எழுத்தாக்கம் | b) தூண்டல் எழுத்தாக்கம் |
| c) தெறிப்பு எழுத்தாக்கம் | d) விபரிப்பு எழுத்தாக்கம் |

27. உங்கள் பள்ளியில் உள்ள பத்தாம் வகுப்பு மாணவர்கள் மத்தியில் உயர்வகுப்புக்கு தமிழை ஒரு பாடமாக எடுப்பதன் தேவையை வலியுறுத்திப் பேச அழைக்கப்பட்டுள்ளீர்கள்.

28. உங்கள் உயர்வகுப்புப் பரீட்சை முடிந்த பின்னர் ஒரு சனிக்கிழமை உங்கள் தமிழ்ப் பாடசாலை வாழ்க்கையை நினைத்துப் பார்த்து உங்கள் நாட்குறிப்பேட்டில் எழுதுகின்றீர்கள்.

29. மாறிவரும் பெண்களின் நிலையும் அது சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கமும் என்பது பற்றிய ஒரு கட்டுரையைப் படித்து அதில் கூறப்பட்ட கருத்துகளை உங்கள் அறிவுக்கு ஏற்ப சீர்தூ க்கிப் பார்த்து உங்கள் எண்ணங்களை பதிவுசெய்கின்றீர்கள்.

**பின்வருவனவற்றுள் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

30. எழுத்தாக்கங்களின் சேமிப்பு – சரியான ஒழுங்கில் அமைந்தவை

a) ஓலை, கணினி, அச்சு, மின்வெளி

b) கணினி, மின்வெளி, அச்சு ஓலை

c) ஓலை, அச்சு, கணினி, மின்வெளி

d) மின்வெளி, கணினி, அச்சு, ஓலை

31. புதிய சொல் அல்லாதது

a) மாற்றுத் திறனாளி

b) தொடருந்து

c) செயலி

d) பனுவல்

**பின்வரும் உரைப்பகுதியை வாசிதது, கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை ஊகித்து விடைத்தாளில் குறிப்பிட்ட இலககத்திற்கு எதிரே எழுதுக.**

வில்வித்தையில் புகழ்பெற்ற ஒரு குருவிடம் கலைகளைக் கற்றுக்கொள்ளச் (32) ____________ ஓர் இளைஞன். மூன்றாண்டுகளில் முழுக் கவனம் செலுத்தி, கற்றுத்தேறி, சிறந்த வில்வித்தைக்காரனாகத் திகழ்ந்தான். ஒரு நாள் (33) ____________ மிஞ்சிட வேண்டும் என எண்ணினான். ஒரு நாள் சிஷ்யனின் மனநிலை அறிந்த குரு அதற்கு ஒத்துக்கொள்கிறார். இருவருக்கும் விற்போர் நடைபெற்றது. எப்படியும் குருவைத் தோற்கடிக்க வேண்டும் என்ற முழு முயற்சியோடு (34) ____________ எய்தான் இளைஞன். குரு தம் அம்புகளைக் கொண்டு இளைஞனின் அம்பைத் தடுத்து வீழ்த்தினார். இறுதியில் குருவிடம் இருந்த (35) ____________ அனைத்தும் தீர்ந்துவிட்டன. குருவோ கலங்கவில்லை. இதுதான் நல்ல சமயம் குருவை எளிதாக வீழ்த்திவிடலாம் என மனக்கோட்டை கட்டினான் சிஷ்யன். அம்பை (36) ____________ குருவின் நெஞ்சுக்கு நேராகக் குறி வைத்தான். குரு பக்கத்தில் இருந்த மரத்திலிருந்து ஒரு கூர்மையான குச்சியை ஒடித்து அந்த இளைஞன் வீசிய அம்பைத் தடுத்து கீழே விழச் செய்துவிட்டார். இளைஞன் ஆச்சரியத்தால் (37) ____________ போனான். இளைஞனே, புதிதாய்ச் சிந்திக்கும் மனமே வெற்றியை சந்திக்கும், சோதனைகளைக் கூடச் சாதகமாகவும் சாதனையாகவும் மாற்றிவிடும் என்று கூறினார். இதுவே தன்னம்பிக்கை.

38. அவுஸ்திரேலியாவிலுள்ள தமிழ் மூத்த குடிமக்களிற்கு தமிழ் இளையோர்கள் எவ்வாறு குடும்பத்திலும், சமூகத்திலும் உதவமுடியும் என்பதுபற்றி உள்ளூர் பத்திரிகை ஒன்றிற்கு 150 சொற்களில் கட்டுரை எழுதுக.

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

# 2015